ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## நாகப்பட்டினம் மாவட்டம்

## தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தில், ஒன்றிய தலைப்பில் கீழ் காலியாக உள்ள ஈப்பு ஓட்டுநர் & இரவு காவலர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிக்கை

அறிவிப்பு எண்: 626/2025/அ1 நாள். 06 .11..2025

நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தில், ஒன்றிய தலைப்பின் கீழ் ஊதியம் பெறும் பணியிடங்களில் காலியாக உள்ள ஓர் ஈப்பு ஓட்டுநர் மற்றும் ஓர் இரவுக்காவலர் காலிப்பணியிடங்களை பூர்த்தி செய்யும் / நிரப்பிடும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 10.11.2025 முதல் 24.11.2025 வரை நேரடியாக அல்லது அஞ்சல் வழி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| பொருள் | | | ஈப்பு ஓட்டுநர் பணியிடம் | இரவுக் காவலர் பணியிடம் |
|---|---|---|---|---|
| 1. | ஊதியம் | - | நிலை - 8 (ரூ.19500 – 71900) | நிலை -1 (ரூ.15700 – 58100) |
| 2. | வயது | - | 18 வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும். | 18 வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும். |
| 3. | 01.07.2025 அன்று அதிகபட்ச வயது வரம்பு | - | 42 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும் | 37 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும் |
| 4. | மொத்த பணியிடங்கள் | - | 1 (ஒன்று) | 1 (ஒன்று) |
| 5. | இன சுழற்சி விவரங்கள் | - | பட்டியல்சாதியினர்-அருந்ததியினர் முன்னுரிமை பெற்றவர் - பெண் தமிழ்வழியில் கல்வி பயின்றோர் (Scheduled Caste - Arunthathiyar – Priority - Women -PSTM). | பட்டியல்சாதியினர்-அருந்ததியினர் முன்னுரிமை பெற்றவர் - பெண் தமிழ்வழியில் கல்வி பயின்றோர் (Scheduled Caste - Arunthathiyar – Priority - Women -PSTM). |
| 6. | கல்வித் தகுதி மற்றும் பிற தகுதிகள் | - | • 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.<br>• ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.<br>• வாகனம் இயக்குவதில் ஐந்து ஆண்டுகள் குறையாமல் முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். | • தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். |
| 7. | விண்ணப்பப் படிவம் | - | விண்ணப்ப படிவத்தினை www.nagapattinam.nic.in என்ற இணையதள முகவரியில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். | |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | விண்ணப்ப கட்டணம் | - | ரூ.50 /-The Commissioner, Panchayat Union, Thalainayar என்ற பெயரில் வங்கி வரைவோலை (Demand draft) எடுத்து விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். | ரூ.50 /-The Commissioner, Panchayat Union, Thalainayar என்ற பெயரில் வங்கி வரைவோலை (Demand draft) எடுத்து விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். |
| 9 | விண்ணப்பங்கள் பெறப்படும் காலம் | - | 10.11.2025 முதல் 24.11.2025 வரை அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ விண்ணப்பத்தை தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தில் அளித்திடலாம் | |
| 10. | கடைசி நாள் | - | **24.11.2025 பி.ப. 5.45-மணி வரை** | |
| 11. | விண்ணப்பத்தை அனுப்பிட வேண்டிய முகவரி | | ஆணையர், ஊராட்சி ஒன்றியம், தலைஞாயிறு. PIN. 614712 | |

நிபந்தனைகள்:-

1. ஈப்பு ஓட்டுநர் / இரவுக்காவலர் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் www.nagapattinam.nic.in என்ற இணையதள முகவரியில் இருந்து விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து அனைத்து கலங்களையும் முழுமையாக பூர்த்தி செய்து கல்வித்தகுதி, சாதிச்சான்று, முன்னுரிமை சான்று, ஓட்டுநர்உரிமம், முன்அனுபவச்சான்று ஆகிய சான்றுகளை சுயசான்றொப்பம் இட்டு (Self attested) நகல்களை 24.11.2025-க்குள் அளிக்க வேண்டும்.
2. நிர்ணயிக்கப்பட்ட இனசுழற்சி, வயது மற்றும் கல்வி தகுதியுள்ள நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும்.
3. தகுதியில்லாத விண்ணப்பங்கள் மற்றும் காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நிராகரிக்கப்படும்.
4. மேற்படி இரண்டு காலிப்பணியிடங்களுக்கான (தனித்தனி விண்ணப்பம்) விண்ணப்ப படிவம் www.nagapattinam.nic.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
5. இவ்வலுவலகத்தால் தகவல் தெரிவிக்கும் வகையில் விண்ணப்பதாரரின் சுயமுகவரியுடன் கூடிய அஞ்சல் வில்லை ஒட்டப்பட்ட காலி அஞ்சல் உறை 1 (10*4 Inches empty Postal cover) இணைத்து அனுப்பிட வேண்டும். இதில் தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்காணல் நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்த தகவல் அஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.
6. மேலே குறிப்பிட்டுள்ள இனசுழற்சி மற்றும் இடஒதுக்கீடு படியே நியமனம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

6.11.25

ஆணையர்,
ஊராட்சி ஒன்றியம், தலைஞாயிறு.

06/11/25